**செ.வெ.எண்:12/மார்ச்** **நாள்: 05.03.2016**

# இராமநாதபுரம் மாவட்டம்

சட்டமன்ற பொது தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்படுத்துவது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம்

மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (05.03.2016) மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்டத்தில் சட்டமன்ற பொது தேர்தல் நடத்தை விதிமுறைகள் செயல்படுத்துவது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் சட்டமன்ற பொது தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை, இராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. மாவட்டத்தில் 5,51,194 ஆண் வாக்காளர்களும், 5,45,915 பெண் வாக்காளர்களும், 74 இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் 10,97,183 வாக்காளர்கள் உள்ளனர். மொத்தம் 1307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தேர்தல் ஆணையத்தின் மூலம் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி 125 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கண்டறியப்பட்டு அதற்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தவிர முறைகேடுகள் நடக்காமல் கண்காணித்திட 12 பறக்கும் படைகளும், 12 நிலைத்த கண்காணிப்புக் குழுவினர்களும் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் அனைத்துக் கட்சியினர் மற்றும் கட்சி சார்ந்த வேட்பாளர்கள் தேர்தல் நடத்தை விதிமுறைகளை கடைபிடிப்பது அவசியமாகும். தேர்தல் கூட்டத்தில் ஒலிபெருக்கி உபயோகித்திட காவல் துறை மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் முன் அனுமதி பெற்று பின்னரே நடத்திட வேண்டும். காலை 6 மணிக்கு முன்பாகவோ, இரவு 10 மணிக்குப் பின்னரோ ரேடியோ ஒளிபரப்பு, வண்டிகளில் ரேடியோ மற்றும் ஒலிபெருக்கி மூலமாகவே தேர்தல் ஆணையத்தின் அனுமதியின்றி தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளக்கூடாது. ஜாதி, மத, இன, மொழி உணர்வுகளைத் தூண்டும் விதமாக பிரச்சாரங்கள் கட்டாயம் இருத்தல் கூடாது. தேர்தல் தொடர்பான புகார்களை தேர்தல் ஆணையத்திற்கோ, தேர்தல் நடத்தும் அலுவலர், மண்டல அலுவலர், தேர்தல் பார்வையாளர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். அனைத்துக் கட்சியினர், கட்சி சார்ந்த வேட்பாளர்கள் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் தேர்தல் நடத்தை விதிமுறைகளை முழுமையாக பின்பற்றி நடைபெற இருக்கும் சட்டமன்ற பொது தேர்தலை அமைதியான முறையில் நடத்திட ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.மணிவண்ணன், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலி அக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராம்பிரதீபன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.இராஜசேகரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.இராமையா, தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மர் உட்பட அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**